**செய்தி வெளியீடு எண் : 079** **நாள் : 12.01.2023**

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## அயலகத் தமிழர்கள் தினம் 2023

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையும் தமிழ் இணையக் கல்விக்கழகமும் இணைந்து **அயலகத் தமிழர் தினம் 2023ஐ** முன்னிட்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தொடர்பு மைய மாணவர்களுக்கு இணையவழிப் பேச்சுப் போட்டி, பாரதியார் ஒப்புவித்தல் போட்டி, திருக்குறள் வினாடி வினா முதலான போட்டிகளை சான்றிதழ், மேற்சான்றிதழ், பட்டக் கல்வியென மூன்று நிலைகளில் இந்திய மற்றும் அயலக மாணவர்களுக்கென தனித்தனியாக நடத்தியுள்ளன. இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக US$ 200, இரண்டாம் பரிசாக US$ 150, மூன்றாம் பரிசாக US$ 100 வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் உலகெங்கும் உள்ள 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆவலுடன் பங்கேற்றனர். குறிப்பாக ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஹாங்காங், அயர்லாந்து, கென்யா, மலேசியா, மொசாம்பிக், மியான்மர், ஓமன், இலங்கை, பிரிட்டன், ஐக்கிய அரபு நாடுகள், அமெரிக்கா மற்றும் இந்தியாவில் கர்நாடகா, மஹாராஷ்டிரா, டெல்லி போன்ற பிற மாநிலங்களிலிருந்து மாணவர்கள் கலந்துகொண்டு, தங்களது தமிழ் மொழி மீதான ஆர்வத்தையும், திறமைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் பங்கேற்றவர்கள் விவரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **போட்டியின் நிலை** | **பேச்சுப் போட்டி** | | **பாரதியார் ஒப்புவித்தல்** | | **திருக்குறள் வினாடி வினா** | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **இந்தியா** | **அயலகம்** | **இந்தியா** | **அயலகம்** | **இந்தியா** | **அயலகம்** |
| 1. | சான்றிதழ் | 64 | 23 | 124 | 60 | 15 | 16 |
| 2. | மேற்சான்றிதழ் | 43 | 13 | 21 | 6 | 16 | 37 |
| 3. | பட்டக் கல்வி | 17 | 30 | 17 | 10 | 42 | 41 |
| | மொத்தம் | **124** | **66** | **162** | **76** | **73** | **94** |
| மொத்தம் – 595 | | | | | | | |

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம், சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் கலையரங்கத்தில் 12.01.2023 அன்று நடைபெற்ற **அயலகத் தமிழர் தின விழாவில்** அறிவிக்கப்பட்டது.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in